Supply of electricity to factories

* 686 *Q*.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any possibility of the removal of restriction in the supply of electricity to factories like B & C Mills in the City of Madras?

THE HON. SRI V. RAMAIAH : It is not possible for the present to remove the existing restrictions in supply of electricity to B & C Mills and other factories receiving H.T. Supply in Madras City area.

SRI S. PAKKIRISAMI PILLAI : பி. அண்டு ஸி. தொழிலாளர்கள் சொல்வது போலவே மற்ற ஜில்லாக்களில் உள்ள சில விவசாயிகளுக்கு இந்த தொழிலாளர்களைக் கஷ்டப்படும்படி செய்து விட்டு மின்சாரக் கட்டுப்பாட்டை வைத்துவிட்டு கிராமப்புறங்களில் விஸ்தரிப்பதாகச் சொல்வது அநியாயமானது. இதை நீக்கி எல்லாத் தொழிலாளர்களுக்கும் கட்டுப்பாடற்ற வேலை நேரம் கிடைக்கும்படியாகச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பது அநியாயமானது என்று கனம் அங்கத்தினரைப் போல எல்லா அங்கத்தினர்களும் கருதிவிட்டால் எனக்குக் கஷ்டமே இருக்காது. கிராமத்திற்குக் கொடுப்பதனால் நகரங்களில் பாதிக்கப்படவில்லை. நகரங்களிலேயே அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிற தொழில்கள் எல்லாவற்றிற்கும் மினசாரம் கொடுக்கவேண்டும் என்பதற்கு ஓரளவு இந்தக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோம்.

SRI P. S. CHINNADURAI : இந்த மாதிரியாக தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டுப்பாட்டை வைத்திருப்பதனால் தொழிலாளர்கள் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அதன் காரணமாக அவர்கள் குடும்ப வாழ்க்கையே பாதிக்கப்பட்டிருப்பதை கோவைமாவட்டத்தில் பல தொழிலாளர்களுடைய குடும்பங்களில் பார்க்கலாம். தொழிலாளர்களுடைய நன்மையை உத்தேசித்தாவது, தொழில் வளரவேண்டும் என்கிற எண்ணத்திலாவது தொழிற்சாலைக்கு விதிக்கப்படுகிற கட்டுப்பாட்டை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : நமது ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் தொழில்களும், தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் பெருகியிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்வது போல தொழிலாளர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படவில்லை. உற்பத்தியாகிய மின்சாரம் நல்ல முறையில் எல்லோருக்கும் விநியோகமாக வேண்டும் என்கிற அடிப்படையில் தொழிலாளர்களும் சம்மதித்திருப்பதன் காரணமாகத்தான் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி யிருக்கிறோம்.

Sugar Mills

* 687 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the terms and conditions under which the loan of rupees five lakhs was granted to Arooran Sugar Limited during 1958;

(*b*) when the loan amount was disbursed; and

10th March 1959]

(c) the purpose for which the loan was granted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The terms and conditions under which the loan to Thiru Arooran Sugars Limited was granted are :—

(i) The loan shall be repaid in full before the 31st March 1959 with interest at 5½ per cent per annum.

(ii) In case of default the debt shall be collected as an arrear of land revenue with penal interest at 7½ per cent per annum.

(iii) A promissory note shall be executed jointly by the Company as well as by Sri V. S. Tyagaraja Mudaliar and another guarantee agreement shall be executed by Sri V. S. Tyagaraja Mudaliar.

(b) The amount was disbursed on 12th August 1958.

(c) The loan was granted to the Company for an agricultural purpose, viz., to finance the purchase of chemical fertilizers for manuring sugarcane crop.

Paper toys

* 688 Q.—MR. SPEAKER : The Hon. Minister wants this question to be taken up next week. So, it will be taken up next week.

MR. SPEAKER : As the hon. Member Sri V. K. Kothandaraman is absent, question No. 689 and the answer will be printed in the official proceedings.

* 689 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) காகித பொம்மைத் தொழில் வடாற்காடு ஜில்லா வேலூரில் ஆரம்பிக்கும் விஷயமாக பரிசிலனை முடிந்து விட்டதா ?

(ஆ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government have decided not to pursue the proposal to establish a Training Centre for manufacture of paper toys, etc., at Vellore, due to the reduction in the provision for handicrfts in the Plan.

Lorries

* 690 Q.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வாடகைக்கு சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடிய லாரிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை இருக்கின்றன ?